பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 23 | திங்கட்கிழமை | 06.01.2024 | கதிர் 423

# அரசமைப்புப் படி அதிகாரங்களைப் பகிர தான் தயார் என்று ஜனாதிபதி தெரிவிப்பு





அரசமைப்புக்கு அமைவாக அதிகாரங்களைப் பகிர்வதற்கு நான் தயாராகவே உள்ளேன். மாகாணத் தலைமைகள் அதற்கான தலைமையை ஏற்பதற்குத் தயாராகவேண்டும். அதன் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் தலைமைத் தெரிவுக்கு இன்னும் 12 நாட்கள்தான் இருக்கின்றன. போட்டி இரண்டு தரப்புக்களுக்கு இடையில் என்பது அனேகமாக முதன்மையாக நடக்கும் என்பது உறுதியாகிவிட்டது. சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோரே அந்த இருவரும்.

மூன்றாவது போட்டியாளரான சீனித்தம்பி யோகேஸ்வரன் கடைசி நேரத்தில் தனக்கான வாக்குகளை இந்த இருவரில் ஒருவருக்குப் போடும்படி மத்தியகுழு உறுப்பினர்களைக் கோருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் சிறீதரனுக்கு ஆதரவாகத்தான் களத்தில் இறக்கப்பட்டார் என்று அரசல் புரசலான கதைகள் ☞ 2

## குப்பைகளை தன்னோடு இணைக்கின்றார் சஜித்

### அனுரகுமார சாடல்

பொதுஜன பெரமுனவில் இருந்தும், ஏனைய கட்சிகளில் இருந்தும் வெளியேறிய குப்பைகளைத் தன்னோடு இணைக்கிறார் ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாஸ என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பு நிகழ்வொன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் ☞ 2

## தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த ஏகோபித்த முடிவை எட்டவேண்டும்

### இப்படிச் சொல்கிறார் ரெலோ தலைவர்

வடக்கு, கிழக்கில் உள்ள அரசியல் கட்சிகள் மற்றும், சிவில் அமைப்புக்களின் ஏகோபித்த முடிவுடன் தமிழ் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்று ரெலோ அமைப்பின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள ரெலோ அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இததைன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்மக்களுக்கு தென்னிலங்கைத் தலைவர்களால் கடந்த காலத்தில் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மறுதலிக்கப்பட்டே வருகின்றன.

அவ்வாறான நிலையில், தற் போது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை தமிழ் கட்சிகளின் சார்பில் நிறுத்தவது தொடர்பில் ஆராயப்படுகின்றது.

இந்த விடயம் சம்பந்தமாக நாம் அனைத்துக் கட்சிகளுடனும் உரையாடுவதற்குத் திட்டமிட்டுள்ளோம். விசேடமாக, தமிழ்அரசுக்கட்சி, தமிழ்த் தேசியமக்கள் முன்னணி உள்ளிட்டவற்றுடன் பேச்சு நடத்தவுள்ளோம்.

அதுமட்டுமன்றி சிவில் அமைப்புக்களுடனும் பேச்சு நடத்தவுள்ளோம். அந்தப் பேச்சுக்கள் ஊடாக ஏகோபித்த நிலைப்பாடுகளை நாம் எடுப்பதற்கு முயற்சிக்கவுள் ☞ 9

## ஐக்கிய மக்கள் சக்திக்குத் தாவிய நாலக கொடகேவா எம்.பிதான் நாட்டின் சீரழிவிற்குக் காரணம்

### நிமல் லன்ஸா குற்றச்சாட்டு

ஐக்கிய மக்கள் சக்தியில் அமைண்மையில் இணைந்து கொண்ட சுதந்திரக் கட்சியின் உப தலைவரான பொது ஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடகேவாதான் நாட்டின் சீரழிவிற்குக் காரணமானவர் என்று சுயாதீன அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸா தெரிவித்தார். அத்தகையவரைக் கட்சியில் இணைத்துக் கொண்டதற்காக ஐக்கிய மக்கள் சக்தியினரையும் அவர் கடுமையாகச் சாடினார்.

கம்பஹாவில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் ☞ 9

## ராஜபக்ஷக்கள் அதிகாரத்தில் இருக்கக் காரணம் ஜேவிபியே

### சாடுகிறார் அலவத்துவல எம்.பி.

மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்தில் அமரக் காரணமானவர்கள் ஜேவிபியினர்தான், அத்தகையவர்கள்தான் ஐக்கிய மக்கள் சக்தி இப்போது குப்பைகளைக் கட்சியில் சேர்ப்பதாகக் கூறுகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு ☞ 8

## ஜேவிபி தலைவர் அனுரவுடன் நேரடி விவாதத்திற்குத் தயார்

### வர்த்தகர் திலித் ஜயவீர சவால்

ஜேவிபி கட்சித்தலைவர் அனுரகுமார திஸநாயக்கவுடன் நேரடியான விவாத்திற்குத் தயார் என்று மவ்பிம ஜனதாக் கட்சியின் தலைவர் இலங்கையின் கோடீஸ்வர வர்த்தகர் திலித் ஜயவீர சவால் விடுத்தார்.

கண்டியில் நேற்று மவ்பிம ஜனதாக் கட்சியின் வருடாந்த மாநாடு நடைபெற்றது. அதில் உரையாற்றிய அவர் இதச் சவாலை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் நாட்டின் முன்னேற்றம் குறித்த நான்கு விடயங்கள் தொடர்பில் பிரதானமாகக் கவனம் செலுத்து ☞ 8

## செங்கடலைப் பாதுகாக்கும் கடற்படைக்கு நாட்டின் வடகடலை காக்க துப்பில்லையா?

### கடற்றொழில் சமாசத் தலைவர் அன்னராசா கேள்வி

செங்கடலைப் பாதுகாப்பதற்குத்திறன்களைக் கொண்டுள்ள இலங்கை கடற்படையால் நாட்டின் வடக்குகடலைப்பாதுகாப்பதற்கு இயவில்லையா என்ற கேள்வி எழுக்கின்றது என்று ஊர்காவற்றுறை கடற்றொழில் சமாசத்தின் செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடகமையத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

செங்கடலைப் பாதுகாப்பதற்காக இலங்கைக் கடற்படையை அனுப்பவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். ஆனால் வடக்கு ☞ 9

## வடக்கு தொடருந்து மார்க்க சேவைகள் தடைப்பட்டன

### 6 மாதங்களுக்கு பாதை மறுசீரமைப்பு

வடக்கு தொடருந்து மார்க்கத்தில் மகோ முதல் அநுராதபுரம் பகுதிவரையிலான ரயில் பாதைபுணரமைப்புக்காக நேற்றுமுதல் அடுத்த ஆறு மாதங்களுக்கு ரயில் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை அநுராதபுரத்திலிருந்து பெலியத்த நோக்கி பயணித்த ரயில் சேவையுடன் குறித்த மார்க்கத்தில் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவின் தலைமையில் மகோவிலிருந்து அநுராதபுரம் வரையிலான பதைப்புணரமைப்புப் பணிகள் நேற்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் போக்குவரத்துத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்த மற்றும் இராஜாங்க அமைச்சர் சாந்தபண்டார ஆகியோர் பங்கேற்றிருந்தனர். அத்துடன் அர்ஜுண ரணதுங்கவும் ☞ 8

## தாய் – இலங்கை இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

### பெப். 3 அன்று கைச்சாத்து

தாய்ந்துடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை எதிர்வரும் பெப்ரவரி 3 கைச்சாத்திடப்படவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு இளைஞர் பௌத்த சங்கத்தின் 125ஆவது வருடாந்த நிகழ்வு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதன் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் இந்த இடத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து நேராக வந்துள்ளேன். அனைத்து மக்களும் ஐக்கிய இலங்கைக்குள் இலங்கையர் என்ற அடையாளத்துடன் வாழ வேண்டும் என்ற ☞ 9

## தென்னிந்தியாவுடன் நிலத் தொடர்பு: பிரதமர் மோடியுடன் ஆராய்ந்தேன்

### பல்கலை மாணவர்களுக்கு விளக்கினார் ரணில்





தென்னிந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் மன்னாரிலிருந்து இந்தியாவுக்கான நில ரீதியிலான ☞ 9

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மீண்டும் அடுத்த வாரம் சபைக்கு

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட மூலம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி. விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

"புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் பயங்கரவாதம் என்ன என்பது தொடர்பில் அர்த்தப்படுத்தல் இருக்கவில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஏற்கனவே இருந்தன. கொழும்பில் சிலதரப்புக்களுடன் நடந்த அரசியல் கலந்துரையாடல்களில் இது பற்றிப் பேசப்பட்டுள்ளது.

அதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அண்மையில் மட்டக்களப்புக்குச் சென்று கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களைச் சந்தித்த சிறீதரன், அந்தக் கூட்டத்தை யோகேஸ்வரனின் வீட்டில்தான் நடத்தினார். இந்த நகர்வின் மூலம் தனது ஆதரவு சிறீதரனுக்குத்தான் என்று யோகேஸ்வரன் சொல்லாமல் சொல்கிறார் என்கிறன அரசியல் வட்டாரங்கள். இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்; புதிதில்லை என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

யோகேஸ்வரன் தலைமைப் பதவிக்கு வேட்புமனுத் தாக்கல் செய்தபோது, தலைமைப் பதவிக்கு வடக்கில் இருந்து இருவர் போட்டியி- டும்போது கிழக்கில் இருந்து எவரும் போட்டியிடவில்லை எனில் கிழக்கில் தலைவராகும் தகுதியுடைய எவரும் இல்லை என்றாகிவிடும் என்பதாலேயே தான் போட்டியிடுகின்றார் என்று தெரிவித்திருந்தார். அப்படிப்பட்ட நிலையில் அவர் கடைசி நேரத்தில் மற்றைய இரு வேட்பாளர்களில் ஒருவரை ஆதரித்து தனக்கான வாக்குகளை அந்த வேட்பாளருக்கு அளிக்கும்படி கோருவாராயின் அது கிழக்கு மக்களை அவமரியாதை செய்வதாகத்தான் சென்று முடியும்.

இப்படி மட்டக்களப்பில் கட்சியின் ஒரு தரப்பு சிறீதரனுக்கு ஆதரவு நிலையில் இருக்கின்றன என்றால் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சுமந்திரனுக்கு ஆதரவு நிலைப்பாடே இருக்கின்றது. இதனால், திருகோணமலை மாவட்ட கட்சியின் கிளைத் தெரிவு மீள நடத்தப்படவேண்டும் என்று பெருந் தலைவர் சம்பந்தன் வலியுறுத்தியிருக்கிறார் என ஊடகங்களில் செய்திகள் வந்திருக்கின்றன.

முன்னதாக, நடைபெற்ற கட்சியின் மூலக்கிளை மற்றும் தொகுதிக்கிளை தெரிவுகளின்போது திருப்தியற்ற நிலைமைகள் நிலவுவதாகக் குறிப்பிட்டு அக்கட்சியின் பெருந் தலைவரான சம்பந்தன் மாவை சோ.சேனாதிராஜாவுக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார். அத்துடன், குறித்த தெரிவுகளின்போது வெளிப்படைத்தன்மை இல்லை மற்றும் திட்டமிட்ட வகையில் புறக்கணிப்பு இடம்பெற்றுள்ளது என்பதையும் கூட்டிக்காட்டியிருந்த அவர் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இதற்கு அமைவாக சீனித்தம்பி யோகேஸ்வரன் தலைமையில் விசாரணைகளை முன்னெடுப்பதாகத் தீர்மானிக் கப்பட்டபோதும், தொடர்ச்சியாகக் காலம் தாழ்த்தப்பட்ட நிலையில் டிசெம்பர் 17 விசாரணைக்குழு திடீரென்று கூடி விசாரணைகளை முன்னெடுத்ததாக அறிவிக்கப்பட்டது. விசாரணைக்குழு கூடியபோது, அதன் தலைவர் சீனித்தம்பி யோகேஸ்வரன் பங்கேற்றிருக்கவில்லை. கட்சியின் தலைமைத்துவ வேட்பாளராக இருப்பதால் விசாரணைக்குழுவில் பங்கேற்க முடியாது என்றுகூறி அவர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

அதேநேரம், முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் முடிவு சம்பந்தமாகவும் எவ்வித வெளிப் படுத்தல்களும் செய்யப்படவில்லை என்றும் குறித்த விசாரணை இடம்பெற்றமை, அதற்கு மறுதினம் திருகோணமலையில் அரசியல்குழு கூடியமை சம்பந்தமாக அம்மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ள சம்பந்தனுக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் சம்பந்தன் தரப்பில் தெரிவிக் கப்படுகின்றது.

இந்நிலையிலேயே திருகோணமலை மாவட்டத்தின் அனைத்துத் தெரிவுகளையும் மீளவும் மேற்கொள்ள வேண்டும் என்றும், அந்தத் தெரிவுகள் அனைத்தும் சுயாதீனக் குழுவொன்றின் முன்னிலையில் வெளிப்படைத்தன்மையாக இடம்பெறவேண்டும் என்று சம்பந்தன் மாவையிடம் வலியுறுத் தியுள்ளார் என்று ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

திருகோணமலைக் கிளையை இப்போது தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவரான குகதாஸன் பெருந் தலைவர் சம்பந்தனின் முன்னாள் ஆதரவாளர். இப்போது அவர் சுமந்திரனுக்கு ஆதரவாக இருக்கிறார் என்று கருதப்படுகின்றது. இந்த நிலையில் அந்தக் கிளையின் தெரிவுகளை மீளவும் நிகழ்த்தவேண்டும் என்றால், சுமந்திரனுக்கு எதிரான கொழும்புக் கிளையின் தெரிவுகள் குறித்தும் இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பிரச்சினையையும் விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படும். கொழும்புக் கிளைத்தெரிவு குறித்து ஒழுக்காற்றுக் குழு ஒப்புக்குக்கூட இதுவரை விசாரணை நடத்தப்படவில்லை. அத்தகைய நிலையில் தமிழ் அரசுக் கட்சிக்குள் இது தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

சம்பந்தர் இப்போது அதிகம் பேசமுடியாத, தொடர்பாட முடியாத நிலையில் அவரை முன்வைத்து நகர்த்தப்படும் இத்தகைய அரசியல் கட்சியின் எதிர்காலத்தை எங்கு கொண்டுபோய் நிறுத்தும் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்....

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசமைப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் மத்திய ஆட்சியாளர்களைத் திட்டித் தீர்த்துக்கொண்டிருப்பதில் பயனில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங் கவிற்கும் யாழ்ப்பாணம் மற் றும் கிளிநொச்சி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி செயற் பாட்டாளர்களுக்கும் இடையி லான சந்திப்பொன்று நேற்று யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட் டலில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இந்தசந்திப்பில் சுமார் 600 கட்சி செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

இந்த சந்திப்பை ஏற்பாடு செய்தது தொடர்பில் விஜயகலா மகேஸ்வரனுக்கு நன்றி தெரிவிக்கிறேன். வடமாகாண பிரச்சினைகளில் காணிப்பிரச்சினை மற்றும் காணாமற்போனோர் பிரச்சினை என்பன முதன் மைப்படுத்தப்பட்டிருந்தன. ஆளும் தரப்பு என்ற வகையில், அந்தப் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

2025ஆம் ஆண்டு இறுதிக்குள் வடக்கின் காணி ப்பிரச்சினை மற்றும் காணாமல்போனோர் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கிறோம். அத்துடன் இடம்பெயர்ந்தவர்களுக்கு வீடுகளை வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வடமாகாணத்தில் காற்றாலை மற்றும் சூரிய சக்தி என்பவற்றை பயன்படுத்தி ஏற்றுமதிக்கான வலுசக்தி உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பசுமை ஹைட்ரஜன் பசுமை அமோனியா உற்பத்தியிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் வளமான விவசாய நிலங்களில் நவீன தொழில்நுட்பத்தை சேர்த்து ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த தசாப்தத்தில் உலக மக்கள் தொகை இரட்டிப்பாகும் நிலையில், அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி விவசாயத்தை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நல்லூர் திருவிழாவை உலக இந்து பக்தர்களுக்கு காணும் வாய்ப்பை வழங்கும் வகையில் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் ஓகஸ்ட் மாதம் எசல பெரஹெர மற்றும் கதிர்காமம் பெரஹெர மற்றும் யாழ். நல்லூர் திருவிழா ஆகியவற்றை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கில் சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்தியில் புதிய முதலீட்டு வாய்ப்புகளை புலம்பெயர் தமிழர்களுக்கு வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான புதிய பொருளாதார மறுசீரமைப்புகளினால் வட மாகாணத்தில் புதிய தொழில் வாய்ப்புகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் உருவாகும். இதனால் வடபகுதி இளைஞர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முடிவுகள் மக்களின் விருப்புக்குரியவையாக இல்லாதிருக்கலாம். ஆனால், நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்காக எந்தவொரு முடிவையும் எடுப்பேன். நாம் அனைவரும் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்து நாட்டை அபிவிருத்தி செய்வோம் - என்றார்.

இதேவேளை, பனை கைத்தொழில்துறையினருடான சந்திப்பும் நேற்று யாழ்ப்பாணம் தந்தைசெல்வா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வடக்கின் சமூகப் பிரச்சினைகள் மற்றும் பனை கைத்தொழில் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதற்கு இரண்டு குழுக்களை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி அங்கு அறிவித்தார்.

இக்குழுவின் அறிக்கைகளும் கிடைக்கப்பெற்றதன் பின்னர் வடக்கில் பனை கைத்தொழிலை நவீனமயப்படுத்துவதற்கு தேவையான தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

வடக்கில் உள்ள அனைவருக்கும் சம உரிமைகள் கிடைக்க வேண்டும் என்றும் அதற்காக தான் முன்நிற்பதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார். வாக்குறுதி அரசியலினால் எந்தப் பயனும் கிடையாது எனவும் பிரச்சினைகளைச் சரியான முறையில் கண்டறிந்து தீர்வுகளை வழங்குவதே அனைவருக்கும் நன்மைபயக்கும் எனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் பனை சார்ந்த தொழில்துறையினர் பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் வடமாகாண சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் வர்த்தகர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்றும் சனிக்கிழமை இரவு வடமாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. வடமாகாணத்தில் சட்டத்துறை தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

## குப்பைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதசதன்னுடன் பொதுஜன பெரமுனவில் இருந்தும், ஏனைய கட்சிகளில் இருந்தும் வெளியேறிய குப்பை கூழங்களை சேர்த்துக்கொண்டு வருகின்றார்.

இவ்வாறான குப்பைகூழங்களை வைத்துக்கொண்டு நாட்டை நிருவகிக்க முடியுமா என்று மக்கள் சிந்திக்கவேண்டும். இந்தக் குப்பை கூழங்கள், 19ஆம் திருத்தத்திற்கும் கை உயர்த்தினார்கள். பின்னர் 20ஆம் திருத்தத்திற்கும் கை உயர்த்தினார்கள். அதனையடுத்து 21ஆம் திருத்தத்திற்கும் கை உயர்த்தினார்கள்.

இதிலிருந்து அவர்களின் அரசியல் கொள்கை என்னவென்று மிகத்தெளிவாக தெரிகின்றது. நாட்டில் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் இத்தகைய கொள்கையற்ற அதிகார மோகத்தில் திளைக்கின்றவர்களை வைத்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

பொதுமக்கள் மாற்றத்தை விரும்புகின்றார்கள். அந்த மாற்றத்தையும், தலைமையையும் வழங்குவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். தேசிய மக்கள் சக்தியுடன் கைகோர்ப்பதன் ஊடாகவே மக்களுக்கான எதிர்காலத்தை உருவாக்க முடியும் - என்றார்.

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலோ, மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலோ, மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையிலோ, பாதிப்புக்கள் ஏற்படுத்தும் விடயங்கள் பற்றி சட்ட ஏற்பாடுகளில் காணப்படுகின்ற விடயங்களை நீதிமன்றமே அர்த்தப்படுத்தி வெளிப்படுத்துவதற்கு சட்டமூலத்தில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது" என்றார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com








காலைக்கதிர் Kalaikkathir

# காணாமல்போனோரின் தாய்மாரை கைதுசெய்வதால் தமிழ் சமூகத்தின் நம்பிக்கையை வெல்லமுடியாது

## அரசைக் கண்டிக்கிறார் அம்பிகா சற்குணநாதன்



வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மாரின் போராட்டத்தைத் தடுப்பதன் மூலம் யுத்தத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதில் அரசாங்கம் கொண்டிருக்கும் அரசியல் ரீதியான தன்முனைப்பைக் காண்பிக்கமுடியாது எனவும், தமிழ் சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுக்கமுடியாது எனவும் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஐக்கிய நாடுகள் நிதியத்தின் உறுப்பினர் அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வவுனியா விஜயத்துக்கு எதிராக வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவி சிவநாதன் ஜெனீற்றாவும், மேலும் சிலரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அதன்போது அவர்கள் பொலிஸாரால் பலவந்தமாக வண்டியில் ஏற்றப்படுவதைக் காண்பிக்கும் காணொளிகள் சமூகவலைத்தளங்களில் வெளியாகி பல்வேறு விமர்சனங்களைத் தோற்றுவித்திருக்கின்றன.

குறிப்பாக இதுபற்றிக் கருத்து வெளியிட்டிருக்கும் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஐக்கிய நாடுகள் நிதியத்தின் உறுப்பினரும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன், உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடும் அரசாங்கம், மறுபுறம் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தடுத்து, அவர்களைக் கைதுசெய்கிறது எனச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அதுமாத்திரமன்றி, யுத்தத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதில் அரசாங்கம் கொண்டிருக்கும் அரசியல் ரீதியான தன்முனைப்பைக் காண்பிப்பதற்கும், தமிழ் சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கும் இது வழியல்ல எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார். (05)

# ஊழல் வாதிகளைப் பாதுகாக்கும் வரியாக பெறுமதிசேர்வரி உள்ளது

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் விசனம்



பெறுமதிசேர்வரி ஊழல்வாதிகளைப் பாதுகாக்கும் வரியாகும். கொள்ளையடித்தவர்களிடமிருந்து பணத்தை மீட்பதற்குப் பதிலாக, அவர்கள் அரசாங்கத்தால் பாதுகாக்கப்படுகின்றனர். எனவே இந்த வற் வரியை ஊழல் நிறைந்த வரி என்று அழைக்கலாம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச விசனம் வெளியிட்டார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 62 ஆவது கட்டமாக மினுவாங்கொட நெதகமுவ கனிஷ்ட வித்தியாலயத்திற்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களைவழங்கும்நிகழ்வில்சனிக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி ஊழல்வாதிகளைப் பாதுகாக்கும் வரியாகும். ஊழல் மிக்க ஆட்சியாளர்கள் ஒவ்வொரு துறையிலும் கொள்ளையடித்ததன் காரணமாகவே நாடு வங்குரோத்தடைந்தது. இவ்வாறு கொள்ளையடித்தவர்களிடமிருந்து பணத்தை மீட்பதற்குப் பதிலாக, அவர்கள் அரசாங்கத்தால் பாதுகாக்கப்படுகின்றனர். எனவே இந்த வற் வரியை ஊழல் நிறைந்த வரி என்று அழைக்கலாம்.

தற்போதைய ஜனாதிபதி ஊழல்வாதிகளின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டதால் ஊழல்வாதிகளைப் பாதுகாத்து வருகிறார். இதன் காரணமாக பொதுஜன பெரமுனவின் 134 பேரும் கூறுவதற்கு ஏற்பகைப்பாவை போன்று அவர் செயற்படுகின்றார்.

செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளால் நமது நாட்டில் பொருள்களின் விலை அதிகரிப்பதால், 250 மில்லியன் ரூபா செலவிட்டு இலங்கை கடற்படைக் கப்பலை ஈடுபடுத்தி, இந்த ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக போராட தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி அண்மையில் தெரிவித்தார். உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகள் இருக்கும் போது இந்த வங்குரோத்து நாடு ஏன் இவ்வாறான செயலைச் செய்ய முன்வருகிறது என்பது ஆச்சரியமளிக்கிறது.

மாணவர்களுக்கு மதிய உணவைக் கொடுக்க முடியாத - பொருள்களின் விலையை குறைக்க முடியாத-இந்த அரசாங்கம் ஹூதி கிளர்ச்சியாளர்களை அடக்க 250 மில்லியன் செலவிட்டுள்ளது. நாடு வங்குரோத்து நிலையில் இருக்கும் வேளையில் முன்னுரிமையளிக்க வேண்டிய பல விடயங்கள் இருந்த போதிலும் ஜனாதிபதி வேறு விடயத்தில் கவனம் செலுத்தியுள்ளார்.

எந்த வித சிறப்புரிமைகளும் சலுகைகளும் வழங்காமலே ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு பல்வேறு தரப்புகளை ஒன்றிணைத்துக் கொள்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தி பணத்தையோ அல்லது சலுகையையோ வழங்காது. ஏனைய தலைவர்களைப் போன்று மக்களுக்கு சேவையாற்ற நான் அதிகாரத்தைக் கேட்கவில்லை. - என்றார். (05)

# கிழக்கு மாகாண தபாலக நிர்வாக கட்டட தொகுதி மட்டக்களப்பில் அமைச்சர் பந்துலவினால் திறப்பு





கிழக்கு மாகாணத்தில் தபால் சேவை நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தும் பொருட்டு சுமார் 45 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 5 மாடிகள் கொண்ட கிழக்கு மாகாண தபாலக நிர்வாக கட்டடத் தொகுதி சனிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் முகமத் அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழா நிகழ்வில் போக்குவரத்து ஊடகத்துறை நெடுஞ்சாலைகள் தபால்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இந்த புதிய அஞ்சல் கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

இந்த அஞ்சல் கட்டடத் தொகுதி இன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவிவகித்த காலத்தில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்க காலத்தில் அதற்கு இடை செய்யப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது. இந்த திறப்பு விழாவில் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் சிவனேசன், இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன், இராஜாங்க அமைச் சர் சதாசிவம் வியாழேந்திரன், ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனு பல்பிட்ட, அதிபர் எஸ் சரத்குமார, மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜெ. முரளிதரன் மற்றும் மத குருமார்கள், அரசாங்கத் திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் புதிய கட்டட தொகுதியில் கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் பிரிவு மாத்திரமன்றி, அலுவலகம், வாகன நிர்வாக கணக்கிட்டு பகுதி, மாகாண அஞ்சல் பயிற்சி நிலையம், மட்டக்களப்பு மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் என்பனவும் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மடு, துணுக்காய் பிரதேசங்களை இணைத்து கல்வி வலயங்களாக மாற்றுவதற்கு ஏற்பாடு

## வடக்கு ஆளுநர் சாள்ஸ் தகவல்



மடு மற்றும் துணுக்காய் பிரதேசங்களை இணைத்து கல்வி வலயங்களாக மாற்றத் திட்டமிட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த முறை உயர்தரத்தில் நாடளாவிய ரீதியில் முதலிடத்தை யாழ்ப்பாணம் பெற்றுக் கொண்டது. க.பொ.த. சாதாரண தர பரீட்சையிலும் சிறப்பான பெறுபேறுகள் கிடைத்திருந்தன. மடு மற்றும் துணுக்காய் பிரதேசங்களை இணைத்து கல்வி வலயங்களாக மாற்றத் திட்டமிட்டுள்ளோம்.

வட மாகாணக் கல்வி அபிவிருத்திக்காக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தாமாக முன்வந்து செயற்திறனுடன் பணியாற்றி வருகின்றனர். அது தொடர்பில் மகிழ்ச்சியடைய முடியும். சுகாதார துறையில் காணப்படும் பிரச்சினைகளை நிவர்த்திக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதேபோல், விவசாய அபிவிருத்தி திட்டங்கள் பலவும் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இதுவரையில் பயிர்செய்யப்படாத நிலங்களில் பயிர்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பிலான தலையீடுகளை மேற்கொண்டமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

இந்தப் பிரதேச விவசாயிகளின் அறுவடைகளைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் தொடர்பில் போக்குவரத்து அமைச்சருடன் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்தார். (05)

# நினைவு நிகழ்வு






சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் முன்னாள் தலைவரும் சாவகச்சேரி அம்பிகா மருந்தகத்தின் உரிமையாளருமான அமரர் சங்கரப்;பிள்;ளை நமசிவாயத்தின் 30 ஆவது ஆண்டு நினைவு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தில் அமரர் நமசிவாயம் நினைவு மண்டபத்தில் லயன் வ.சிறிபிரகாஸ் தலைமையில் சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் சாவகச்சேரி வணிகப்பெருமக்கள் பலரும் கலந்து உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம், யுத்தம் உக்கிரமடைந்த காலத்தில் சாவகச்சேரி வணிகர் கழகத்தைச் சீரியபாதையில் கொண்டுநடத்தி நிறைவான மக்கள்பணி ஆற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தீர்வு எப்பபோது கிடக்கும்?

மருந்துப் பற்றாக்குறை, எரிபொருள் கிடைக்காதது, சமையல் எரிவாயு கிடைக்காதது, 12 மணி நேர மின்வெட்டு, அடிப்படை உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு, வேளாண் இரசாயன உரங்களுக்குத் தடை ஆகியவையே 'அரகலயா' மக்கள் போராட்டம் தொடங்குவதற்கு வழிவகுத்தன. நாம் அனைவரும் அறிந்தபடி, இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் நமது நாட்டின் வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த இயலாமையால் எழுந்தன. இது சர்வதேச கடன்களை ஆதாரமாகக் கொள்ளும் திறனைத் துண்டித்தது.

இதிலிருந்து தப்பவே அனைத்துலக நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடியது. அது நிபந்தனைகளுடன் கூடிய கடன் எனபது அறிந்ததே. அந்த நிபந்தனைகளின் ஒன்று அரசு போதிய வருமானத்தைப் பெறவேண்டும் என்பது. நிபந்தனைகளின்படி அரசு மேம்பட்ட வருவாய் ஆதாரங்களைக் காட்ட வேண்டிய அவசியம் உள்ளது. இதன் விளைவாக, ஆளும் தரப்பு மானியங்களைக் குறைத்து, பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரிகளை விதித்துள்ளது.

இருப்பினும், அரசின் இந்த நடவடிக்கைகள் வருவாய் சேகரிப்பில் விரும்பிய இலக்குகளை அடையவில்லை. இதனால் நாணய நிதியத்தின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு கிடைப்பது தடைப்பட்டது. அதனால் இன்று, அத்தியாவசிய பொருட்கள் உட்பட ஏராளமான பொருட்களுக்கு புதிய மதிப்பு கூட்டு வரியை (வாட்) அரசு விதித்துள்ளது. புதிதாக விதிக்கப்பட்டுள்ள வற் வரியால் பொருட்களின் விலை 3 சதவீதம் அதிகரிக்கின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் இப்போது கிடைக்கின்றன, ஆனால் மானியங்கள் அகற்றப்பட்டதால், அவை மிகவும் விலை உயர்ந்தவை. இப்படியான அதிக செலவுகள் பெரும்பாலான மக்களை வறுமையில் ஆழ்த்தியுள்ளது.

கொவிட்வைரஸ்நாட்டைதாக்கியதில்இருந்துதொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்படவில்லை. பல வணிகங்கள் மூடப்பட்டு குறைந்தது 50,000 பேர் வேலைவாய்ப்பை இழந்தனர். இவர்களில் பலருக்கு இன்னும் வழக்கமான வேலை இல்லை, அதாவது இப்போது அவர்கள் கையில் செலவுக்கான பணம் குறைவாகவே உள்ளது.

6.2 மில்லியன் மக்கள் (மக்கள் தொகையில் 28 சதவீதம்) மிதமான உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகவும், 66,000 பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பின்றி இருப்பதாகவும் யூனிசெஃப் சுட்டிக்காட்டுகிறது. ஐந்தில் இரண்டு குடும்பங்கள் (41.8 சதவீதம்) தங்கள் செலவினங்களில் 75 சதவீதத்திற்கும் மேலாக உணவை வாங்குவதற்குச் செலவிடுகிறார்கள், இதனால் சுகாதாரம் மற்றும் கல்விக்காகச் செலவிட அவர்களிடம் பணமில்லை.

இந்த மாதம் வற் வரி உயர்த்தப்பட்டால் இவர்களின் நிலை என்னவாகப் போகிறது?

இந்நாட்டில் உள்ள சாதாரண மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினையைப் பற்றிய சிந்தனை நமது ஆட்சியாளர்களுக்கு இருக்கிறதா?

பல தொழிலாளர்களுக்கு சுமார் ரூ. 40,000 மாதச் சம்பளம். அவர்/அவள் அதிர்ஷ்டசாலியாக இருந்தால், கணவன் மற்றும் மனைவியின் கூட்டு வருமானமும் சேர்ந்து மொத்தம் ரூ. 80,000 ரூபாய் கிடைக்கும். பெரும்பாலான குடும்பங்களில் சராசரியாக இரண்டு முதல் மூன்று குழந்தைகள் உள்ளனர். நான்கு பேர் கொண்ட குடும்பத்தின் நிகர மாத வருமானம் ரூ. 80,000. அதுவும் கூடுதல் நேரத்துடன், குடும்பத்தில் இருவர் பணிபுரிந்தால்.

ஒரு குடும்பத்தின் முக்கிய செலவுகள் வீட்டு (வீட்டு வாடகை, மின்சாரம் மற்றும் தண்ணீர்) செலவு: ரூ. 29,800. வேலைக்குச் செல்லவும் வரவும்: ரூ. 9,960. உணவு செலவுகள்: ரூ. 45,800 (1 கிலோ கோழி இறைச்சி, 500 கிராம் மீன் மற்றும் 800 கிராம் தூள் பால் உட்பட). இரண்டு குழந்தைகளுக்கான கல்விக் கட்டணம் உட்பட சுமார் ரூ. 28,900. நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு (ஆண்டுக்கு) ஆடை விலை ரூ. 20,000 (மாதம் தோராயமாக ரூ. 1,500), மருத்துவச் செலவுகள் ஆண்டுக்கு சுமார் ரூ. 15,000 (மாதம் ரூ. 1,000).

அதாவது ஒரு குடும்பத்திற்கு சுமார் ரூ. 116,720 ஒரு மாதத்திற்கு மிக அடிப்படையான அத்தியாவசியங்களை ஈடுகட்ட. இந்தக் குடும்பங்களால் திரைப்படம் பார்க்கவோ அல்லது பொழுதுபோக்குச் செலவுகளோ செய்ய முடியாது. இக்குடும்பங்களின் பிள்ளைகளுக்கு இப்போது விளையாட்டுகளிலோ அல்லது பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயல்களிலோ பங்கேற்கும் திறன் இல்லை.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இந்தக் குடும்பங்கள் கடனில் ஆழ்ந்து வருகின்றன, மேலும் புதிய வற் விலை உயர்வு நடைமுறைக்கு வரத் தொடங்கியவுடன் இந்த நிலைமை மோசமாகிவிடும்.

விஷயங்களை மோசமாக்குவது என்னவென்றால், சமூகத்தின் ஏழ்மையான பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் விரைவில் படிக்கும் மற்றும் போட்டித் தேர்வுகளில் போட்டியிடும் திறனைப் பெற மாட்டார்கள். அவர்களை வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கிறார்கள்.

இவற்றுக்கு என்ன தீர்வு? எப்போது கிடைக்கும்?



# ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

யேமனில் மிகக் கடுமையான உள்நாட்டுப் போர் நிகழ்ந்து வரும் சூழலில் அப்போரில் 201ஆம் ஆண்டு முதல் தலையிட்டுவரும் சவுதி அரேபியாவிற்குக் கடந்த சில ஆண்டுகளில் மட்டும் 43 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுதங்களை ஜி-20 நாடுகள் வழங்கியுள்ளன என்பதை ஆக்ஸ்ஃபாம் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

### சவூதி - ஈரான் மறைமுகப் போர்

2015ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடந்து-வரும் தாக்குதல்களால் உலகின் மிகப்பெரிய மனிதப் பேரவலத்தை யேமன் சந்தித்து வருகிறது. பாதி மருத்துவமனைகள் மட்டுமே செயல்படுகின்றன. மேலும், பத்து நாட்களுக்கு ஒரு முறை ம





ருத்துவமனைகள், சுகாதாரநிலையங்கள், நீர்த்தொட்டிகள் மற்றும் குடிதண்ணீர் கிணறுகளின் மீது வான்வழித் தாக்குதல்கள் நடப்பதாக ஆக்ஸ்ஃபாம் கூறியிருக்கிறது.

கிட்டதட்ட 1 கோடி மக்கள் பட்டினியாலும், கொலரா நோயினாலும் மிகக் கடுமையாக யேமனில் (Yemen) பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது போல ஒரு பக்கத்தில் தாக்குதல் நடத்த சவுதிக்கு ஆயுதங்களை வழங்கி விட்டு, மறுபக்கத்தில் யேமனுக்கும் (கூஃளது-ளஜ) உதவித் தொகையை மேற்குலகும் ஜி20 நாடுகள் வழங்கியுள்ளன என

ஆக்ஸ்ஃபாம் (Oxfam) அறிக்கை அண்மையில் கூறியுள்ளது.

2015இல் யேமன் ஆட்சியைக் கவிழ்த்த ஈரான் ஆதரவு ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள், சவுதி அரேபியா தலைமையிலான பன்னாட்டு கூட்டணிக்கு எதிராகப் போரிடுகின்றனர்.

இந்த மோதல் நான்கு மில்லியனுக்கும் அதிகமான மக்களை இடம்பெயரச் செய்துள்ளது மற்றும் கொலரா தொற்று, மருந்து பற்றாக்குறை மற்றும் பஞ்ச அச்சுறுத்தல்களுக்கு வழிவகுத்தது.

சண்டையிடும் கட்சிகள் 2022 இல் ஒரு மாத காலப் போர் நிறுத்தத்தை கடைப்பிடித்தன. இது ஓர் அரசியல் தீர்வுக்கான நம்பிக்கையை எழுப்பியது, ஆனால் பின்னர் ஒக்டோபரில், அவர்கள் போர் நிறுத்தத்தை நீடிக்கத் தவறினர்.

### யேமனின் பிரிவுக்கும் - போருக்கும் காரணம்

யேமன் அதன் வடக்கு மற்றும் தெற்கிற்கும் ஐரோப்பிய காலனித்துவத்தின் பாரம்பரியத்திற்கும் இடையிலான மத மற்றும் கலாச்சார வேறுபாடுகளுடன் நீண்ட காலமாக போராடி வருகிறது. வடக்கில் அமெரிக்கா மற்றும் சவூதி ஆதரவு பெற்ற யேமன் அரபுக் குடியரசும், தெற்கில் சோவியத் ஆதரவு பெற்ற யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசும் ஒன்றிணைந்து 1990 ஆம் ஆண்டில் நவீன யேமன் அரசு உருவாக்கப்பட்டது.

1978 முதல் வடக்கு யேமனை ஆட்சி செய்த இராணுவ அதிகாரி அலி அப்துல்லா சலே புதிய நாட்டின் தலைமையை ஏற்றார். ஆனால் நாட்டின் இரண்டு பகுதிகளுக்கும் இடையில், ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வது கடினம், ஏனெனில் இரண்டு இடங்களுக்கு இடையிலான உறவுகள் கடினமாக இருப்பினும், ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு பயணிக்க பல நிபந்தனைகள் உள்ளன. நகரத்தில் பயணம் செய்வதும் சாதாரணமானதாக இல்லை. ஏனெனில் அதற்கு நீண்ட நேரம் ஆகும்.

### தற்போதைய நெருக்கடிக்கு என்ன காரணம்?



பொருளாதாரத் தடையால் யேமன் மக்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் அறிக்கைகள் தெரிவித்துள்ளன. தேவையான அனைத்து பொருட்களும் மிக அதிக விலை கொண்டவை. குறிப்பாக, உணவு, உடைகள், சமையல்ப் பொருட்கள், ஆய்வுப் பொருட்கள் போன்றவை, எனவே அவர்களின் வாழ்க்கையைக் கடப்பதும் சவாலுக்குரியது.

பல காரணிகள் இந்த அரசியல் பிளவுகளை விரிவுபடுத்தி முழு அளவிலான இராணுவ மோதலுக்கு வழிவகுத்தன.

யேமன் நாடு போருக்கு மத்தியில் பொதுமக்கள் கடுமையாகத் துன்பப்படும் இடமாக மாறியுள்ளது. இப்போது எட்டு ஆண்டுகளாக இந்தச் சண்டை ஒரு மறைமுக ஆதிக்கப் போராக மாறிவிட்டது என்று பல ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

யேமன் ஆளும் தரப்பைக் கவிழ்த்த ஈரான் ஆதரவு ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள், சவுதி அரேபியா தலைமையிலான பன்னாட்டு கூட்டணிக்கு எதிராகப் போரிடுகின்றனர்.

அத்துடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAI)

(8ஆம் பக்கம் பார்க்க...)

# அகிலத்திருநாயகியை நேரில் சந்தித்து ஜனாதிபதி பாராட்டு



பிலிப்பைன்ஸில் நடைபெற்ற 22 ஆவது 'மூத்தோருக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப்' போட்டியில் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் வென்ற அகிலத் திருநாயகியை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, நேரில் அழைத்து பாராட்டி கௌரவித்து மதிப்பளித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது, வயது என்பது வெறும் இலக்கம் மட்டுமே என்பதை நிரூபித்து அகிலத்தை வென்ற அகிலத்திருநாயகிக்கு ஜனாதிபதி வாழ்த்துகளைத் தெரிவித்துகொண்டார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் விளையாட்டுத்துறைமேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களுக்கு ஆதரவையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

இவருக்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறும் ஆளுநருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற சிரேஷ்ட பிரஜைகளுக்கான தடகளப் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றிருந்த திருமதி அகிலத் திருநாயகி (வயது 71) இரண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த இவர், 1,500 மற்றும் 5000 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார். 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெண்கல பதக்கம் வென்றுள்ளார். 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் நான்காவது இடத்தை பிடித்துள்ளார்.

அப்போட்டிக்கு முன்னர் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய 22 ஆவது ஆசிய சிரேஷ்ட பிரஜைகளுக்கான போட்டியில் பங்கேற்ற இவர், அதில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்களை வென்றார்.

இவர் ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரியாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ். மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலய காணியை விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன்

## வட மாகாண ஆளுநர் சாள்ஸ் வாக்குறுதி



யாழ். மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்துக்கான காணியை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன் என வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ்ப்பாணம் மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தில் புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

சுமார் 28 வருடங்களின் பின்னர் பாதுகாப்பு படையினிடமிருந்து விடுவிக்கப்பட்ட யாழ். மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்துக்கான புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க இலங்கை விமானப்படை முன்வந்துள்ளது.

சுமார் 8 மில்லியன் ரூபா செலவில் இலங்கை விமானப்படையினரால் பாடசாலைக்கான புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இன்றைய நாள்களில் ஜனாதிபதியின் விஜயத்தில் வடக்கு மாகாணத்தில் பலதரப்பட்ட சந்திப்புகளையும் மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களையும் நடத்தி மக்களின் தேவைகள், அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடி வருகிறார்.

அத்தகைய விடயங்களில் மக்களின் தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரைகளையும் விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், ஏனைய உட்கட்டமைப்பு பிரச்சினைகள் தொடர்பில் எழுத்து மூலம் கோரிக்கைகளை பிரதேச செயலாளர் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்குமாறும், அதன் பிரதியை தனக்கும் அனுப்பிவைக்குமாறும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

1818 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயம், அசாதாரண நிலைமையின் காரணமாக 1990 ஜூலை 16 ஆம் திகதி பாதுகாப்புப்படையினர் கைப்பற்றினர்.

சுமார் 28 வருடங்களின் பின்னர், 2018 செப்ரெம்பர் 06 ஆம் திகதி இந்த பாடசாலை மீண்டும் பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DISHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chicken Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தமிழ்ப் பெண் வைத்தியர் நோர்வேயில் படுகொலை



நோர்வே நாட்டில் 30 வயதான தமிழ் பெண் வைத்தியர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நோர்வேயின் எல்வெரும் என்னும் பகுதியில் குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவர் புத்தாண்டு தினத்தன்று படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் உயிரிழந்த பெண்ணின் உடலில் பல துப்பாக்கி சூடு காயங்கள் இருந்தன எனவும் அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இவர் பல் வைத்தியர் என்பதோடு நீண்ட காலமாக இவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் சடலம் கண்டெடுக்கப்பட்ட காரிலிருந்து கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை மிரட்டல் தொடர்பில் உயிரிழந்த பெண் பல தடவைகள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்ததோடு, அது தொடர்பில் உரிய முறையில் பொலிஸார் கவனம் செலுத்தவில்லை என குடும்பத்தினர் முன்னதாக குற்றம் சுமத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளதுடன், விற்பனைக்கு தயாராக மறைத்து வைக்கப்பட்டிருந்த 45 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட திம்பிலி கிராம அலுவலர் பகுதியில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த கிராம அமைப்புக்கள் இளைஞர்கள் ஒன்றுதிரண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அந்தவகையில் தமது கிராமத்தில் போதைப்பொருள் விற்பனை அதிகரித்துள்ள நிலையில் போதைப்பொருள்களை விற்பனை செய்பவர்களை இனம் கண்டு அவர்களை பொலிஸாரின் உதவியுடன் கைது செய்து தமது கிராமத்தில் போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் வகையில் செயற்பாடுகளை ஆரம் பித்துள்ளனர்.

இதற்கமைய புதுக்குடியிருப்பு திம்பிலி கிராமத்தில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைவாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹெரத் தலைமையில், பொலிஸ் கொஸ்தாபல்களான ஜே.நிக்கலஸ், பி.விதுரன, வி.கவிராஜ், அபயகோன் உள்ளிட்ட பொலிஸார், கிராம சேவையாளர் தமிழ்செல்வன், கிராம அபிவிருத்தி சங்கம், கிராம மக்கள் மற்றும் இளைஞர்களை இணைந்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அப்பகுதியை சுற்றிவளைத்த பொலிஸார் உட்பட்ட குழுவினர் விற்பனைக்கு தயாரான நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 45 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டிருந்தது. எனினும் சந்தேக நபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை.

திம்பிலி கிராம மக்கள் மற்றும் இளைஞர்களின் முன்மாதிரியான செயற்பாடு எனவும், போதை பாவனையை ஒழிக்க முன்வந்திருந்தமை பாராட்டத்தக்கது என இதன்போது புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்திருந்தார். (05)

# கட்டைக்காட்டில் 55 கிலோ கேரளக் கஞ்சா சிக்கியது

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 55 கிலோ பெறுமதியான கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கட்டைக்காட்டில் அண்மைக்காலமாக போதைப்பொருள்களை ஒழிக்கும் நோக்கிலான விசேட சுற்றிவளைப்புக்கள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, கட்டைக்காடு காட்டுப் பகுதிக்குள் போதைப்பொருள் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாக கடற்படையினருக்கு புலனாய்வுத் தகவல் கிடைத்துள்ளன.

அதன் பிரகாரம், வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் வெற்றிலைக் கேணி கடற்படையினர் குறித்த இடத்தை திடீரென சுற்றிவளைத்து புதைக்கப்பட்டிருந்த போதைப்பொருள்களைத் தேடினர்.

காட்டுப் பகுதிக்குள் பெருமளவான கஞ்சா பொதிகளை புதைத்து வைத்துள்ள கடத்தல்காரர்கள் பாதுகாப்பு படையினரின் சோதனைகளால், அந்த கஞ்சா பொதிகளை விற்பனை செய்ய முடியாமல் திண்டாடிய நிலையிலேயே பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டனர். இரண்டு மணிநேரமாக 15 இற்கும் மேற்பட்ட கடற்படையினர் புலனாய்வாளர்களுடன் தேடுதல் நடத்தி வந்தபோது 55 கிலோ பெறுமதியான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# தங்கை கர்ப்பம் அண்ணன் கைது

தனது சொந்த தங்கையை கர்ப்பமாக்கிய அண்ணனை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ஏ.றஹீம் தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தில் 24 வயது அண்ணன் தனது 14 வயதுடைய பாடசாலை மாணவியான தங்கையை கர்ப்பமாக்கியதால் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐந்து மாத கர்ப்பிணியான தங்கை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# டிஜிற்றல் பிறப்புச் சான்றிதழ்கள் வேலைத்திட்டம் நாட்டில் ஆரம்பம்

*நாட்டில் பிறப்புச் சான்றிதழ்களை டிஜிற்றல் மயமாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த நிலையில் குறித்த திட்டம் களுத்துறை மாவட்டத்தில் முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக் பிரியந்த குறிப்பிட்டார். (05)*



## ஜேவிபி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றோம். அவை தொடர்பில் கலந்துரையாடுகின்றோம்.

தேசிய தளத்தில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்திடமும் நான் பகிரங்கமான கோரிக்கையை முன்வைக்கின்றோம். எம்மைத் தேவையில்லாத அரசியல் சாக்கடைக்குள் தள்ளிச் செல்லாதீர்கள்.

நீங்கள் எம்மீது வாரியிறைக்கும் சேற்றுக்கு எம்மால் தக்க பதில் வழங்கப்படும். எங்களுடைய சகோதரர் அநுரகுமார திஸாநாக்கவுடன் நான் பகிரங்கமான விவாதத்தினை நடத்தத் தயாராகவே உள்ளேன். முடிந்தால் அவர் எந்த நேரத்தில் எந்தத் தளத்துக்கும் வந்து எம்முடன் விவாதிக்க முடியும்.

மூன்றாம் தர நாடுகளை மிக மோசமான பின்னடைவுகளுக்கு இட்டுச் செல்லும் சிந்தனையுடைய தீவிர சிந்தனையுடைய அரசியல் கட்சிகள் தற்போது என்ன கூறுகின்றன என்பதை ஒருதடவை கவனத்தில் கொள்ள வேண்டும்.

திருடர்களை கைது செய்து மீண்டும் திருடிய பணத்தை மீட்போம் என்று கூறுகின்றார்கள். அதேநேரம் பிணைமுறி மோசடியாளர்கள் பணத்தை மீளச் செலுத்த முடியாது என்றும் அதனை மறந்துவிடுமாறும் கூறுகின்றபோது அதனை ஏற்றுக்கொள்கின்றார்கள். இவர்களால் நாட்டை எவ்வாறு முன்னோக்கி கொண்ட செல்ல முடியும்.

தற்போதைய நிலையில் பிரதான அரசியல் கட்சிகளான, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, பொதுஜனபெரமுன ஆகியன அனைத்தும் ஒரே இடத்திலேயே உள்ளன. அவை ஒன்றுபட்டுத்தான் உள்ளன. அதனால் தான் தற்போது எத்தகைய வரிகளையும் விதிக்க முடிகின்றது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைக் காண முடியவில்லை. கடந்த காலங்களில் வாரத்துக்கு இரண்டு சிவப்புக் கொடிகளுடனான வரி எதிர்ப்பு போராட்டங்களை கண்டோம். இப்போது எதனையுமே காண முடியவில்லை.

கடந்த காலத்தில் சம்பிரதாய அரசியலில் மக்களுக்கு இரண்டு தெரிவுகளே காணப்பட்டன. இரண்டு அரசியல் தரப்புக்களே பிரதான இடத்தில் இருந்தன. தற்போது அந்த நிலைமைகள் மாறிவிட்டன. 60 சதவீதமான மக்கள் சம்பிரதான அரசியல் கட்சி;களை தவிர்த்து புதிய மாற்றத்தினை எதிர்பார்ப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன என்றார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் கலந்து கொண்டிருந்தார்.

இந்தப் புனரமைப்புப் பணிகளுக்காக இந்தியா 14.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது. முன்னதாக அநுராதபுரத்திலிருந்து, ஓமந்தை வரையிலான புணரமைப்பு பணிகளுக்கும் இந்தியா நீடிக்கப்பட்ட கடன் வசதியூடாக நிதி வழங்கியிருந்தது.

## ராஜபக்ஷக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஐக்கிய மக்கள் சக்தியில் குப்பைகளைச் சேர்ப்பதாகக் கூறுகின்றார்கள். முதலில் அவர்களின் வரலாற்றைப் பார்க்க வேண்டும்.

தற்போது பிரபுக்கள் போன்று கதைகளைக் கூறும் அநுரகுமார போன்றவர்கள்தான் மஹிந்த ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷக்களை அரசியல் அதிகாரத்தில் இருத்தக் காரணமானவர்கள்.

அவர்களை அதிகாரத்துக்குக் கொண்டு வந்தவர்கள்தான் நாட்டின் வங்குரோத்துக்குக் காரணமாக இருக்கின்றார்கள் என்று உயர்நீதிமன்றம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. ஆகவே குப்பைகளை அரசியல் அதிகாரத்தில் அமர்த்தியவர்கள் யார் என்பதை அவர்கள் கண்ணாடியின் முன்நின்று கேட்க வேண்டும் என்றார்.




# எமது தீர்மானங்கள் சரியென மக்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் வந்துவிட்டது

## இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கருத்து



சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்ற எமது தீர்மானங்கள் சரியானவையென்று பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் தற்போது வந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

வற்வரி அதிகரிப்பு தொடர்பில் கருத்துக்களை வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொருளாதார ரீதியில் நெருக்கடியான நிலைமையொன்று ஏற்பட்டபோது அதனை உள்நாட்டு நிலைமைகள் ஊடாக சீர் செய்ய முடியும் என்ற விடயத்தை நாம் கடந்த காலங்களில் தொடர்சியாக வலியுறுத்திக் கூறினோம்.

சர்வதேச நாணய நிதியத்திடம் நீடிக்கப்பட்ட கடன்வசதியைப் பெற்றுக்கொள்வதால் நிலைமைகள் மேலும் மோசமடையும் என்று சுட்டிக்காட்டியதோடு குறிப்பாக சாதாரண மக்களின் அன்றாட வாழ்வாதார நிலைமைகள் நெருக்கடிக்குள்ளாகும் என்றும் குறிப்பிட்டேன்.

எனினும், அச்சமயத்தில் என்மீதும் அப்போதைய அரசாங்கத்தின் மீதும் மிகக் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவில்லை என்று குறிப்பிட்டு எனக்கு எதிராக நீதிமன்றத்தைக் கூட நாடியிருந்தார்கள்.

ஆனால், தற்போதைய ஆட்சியாளர்கள் சர்வதேச நாணய நிதியத்தை நாடினார்கள். நீடிக்கப்பட்ட கடன்வசதியின் இரண்டாவது தவணைப்பணத்தையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

ஆனால், தற்போது மக்கள் மீது வரிச்சுமை அதிகரித்துள்ளது. மக்கள் அன்றாட வாழ்க்கையை முன்னகர்த்த முடியாது நெருக்கடியில் சிக்கியுள்ளனர்.

இந்தத் தருணத்தில் பலர் நாம் ஏலவே தெரிவித்த கருத்துக்களும், தீர்மானமும் சரி என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். அதனை பொதுமக்களும் ஏற்றுக்கொள்ளும் காலமும் வந்துவிட்டது.

அந்த அடிப்படையில் ஒருவிடயத்தைக் கூற வேண்டியுள்ளது. குறிப்பாக ஆற்றில் குதிப்பதற்கு முன்னதாக அங்கே முதலைகள் இருக்கின்றனவா என்பதை ஒன்றுக்கு இரண்டு மூன்று தடவைகள் பரிசீலனைக்குஉட்படுத்தியபின்னரேயேகுதிப்பதற்குத் தயாராக வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் தற்போதைய நிலைமைகளே உருவாகும் என்பது மிகத்தெளிவானது. – என்றார். (05)

# படோவிற்ற அசங்கவின் சகா போதைப்பொருளுடன் கைது

போதைப்பொருள் வர்த்தகரான படோவிற்ற அசங்க எனப்படும் ராஜித அசங்கவின் சகா ஒருவர் போதைப்பொருளுடன் குற்றப் புலனாய்வுபிரிவினரால் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் தெஹிவளை பிரதேசத்தை சேர்ந்த 35 வயதுடையவராவார்.

யுக்திய நடவடிக்கையின்போது மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் 6 கிராம், கேரளா கஞ்சா 10 கிராம், 4 லட்சத்து 67 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம், 5 வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்படும் கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

காலி சிறைச்சாலையில் 7 கைதிகள் காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்டு காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக காலி சிறைச்சாலை அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

5 கைதிகள் காய்ச்சல் காரணமாக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சனிக்கிழமை மேலும் இரு கைதிகள் காய்ச்சல் காரணமாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர், காய்ச்சலால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் உயிரிழந்தமைக்கு மூளைக்காய்ச்சலே காரணம் என பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இதேவேளை, காலி சிறைச்சாலையில் பார்வையாளர்களை பார்வையிடுவதற்கும் ஏனைய நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதற்கும், புதிய கைதிகளை அகுணுகொலபலஸ்ஸ சிறைச்சாலைக்கு அனுப்பவும் சிறைச்சாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (05)

# அச்சுவேலியில் வெள்ளி இரவு இரு ஓட்டோக்கள் தீக்கிரை

யாழ்ப்பாணம் – அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு ஓட்டோக்கள் தீக்கிரையாக்கப்பட்டன. மேற்படி சம்பவம் வெள்ளி இரவு இடம்பெற்றதாக பாதிக்கப்பட்டவரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக இரண்டு வன்முறை கும்பல் இடையே இடம்பெற்றவாள்வெட்டுசம்பவங்களின் தொடர்ச்சியாகவே இரண்டு ஓட்டோக்கள் தீக்கிரையாக்கப்பட்டது என பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

## நாலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ள நாலக கொடஹேவா தான் கோட்டாபயவின் வலதுகையாக இருந்தவர். வியத்மக அமைப்பின் தலைமையை தக்கவைத்துக்கொண்டு கோட்டாபயவை அரசியலுக்கு அழைத்துக் கொண்டு வந்தவர்.

அதுமட்டுமன்றி, அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் கோட்டாபயவுக்கு வரிக்குறைப்புச் செய்யவேண்டும் என்று ஆலோசனை வழங்கி அதனைச் செயற்படுத்தியவரும் நாலக்க கொடஹேவாதான். அவ்வாறானவர் தற்போது குட்டிக்கரணம் அடித்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டு மாற்றத்தை ஏற்படுத்தப்போவதாக கூறுகின்றார்.

இவரை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்துக்கொண்டவர்களிடத்தில் எனக்கு கேள்வியொன்று உள்ளது. நாலக்க கொடஹேவா போன்ற நாட்டைச்சீரழித்தவர்களைகட்சியில் ஆடைகளை அணிந்துகொண்டா இணைத்துக்கொண்டுள்ளீர்கள் என்றார்.

## தமிழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளோம்.

அவ்தமான ஏகோபித்த நிலைப்பாட்டை எடுக்கும் பட்சத்தில் தான் முன்னிறுத்தப்படும் தமிழ் பொதுஜனாதிபதிவேட்பாளர் விடயம் பொதுமக்களிடத்தில் கொண்டு செல்வதற்கு இலகுவாக இருக்கும்.

அதுமட்டுமன்றி,தென்னிலங்கை தலைவர்களுடனும் நிபந்தனைகளை விதிப்பதற்கு ஏதுவான நிலைமைகளையும் ஏற்படுத்தும். ஆகவே அந்தச் செயற்பாடுகளை அடுத்த கட்டமாக ரெலோ முன்னெடுக்கவுள்ளது என்றார்.

## தாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

அத்துடன் நாங்கள் பொருளாதார ரீதியாகப் பலமடைய வேண்டியுள்ளது. தற்போது சர்வதேச நாணய நிதியமானது, எமது நிதி நிர்வாகத்தினை ஒழுங்கமைக்கும் வகையில் நிதி நிர்வாக ஒழுங்குபடுத்தல் அறிக்கையை அளித்துள்ளது.

அதில், எவ்வாறு கேள்வி பத்திரங்களை கோருதல், எவ்வாறு நிதி செலவீனங்களை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் குறித்துரைத்துள்ளார்கள்.

நாம் சர்வதேசத்துடன் இணைந்துபயணிப்பதாகஇருந்தால் நாம்ஏனையசர்வதேசநாடுகளுடன் கூட்டிணைந்துபயணிக்கவேண்டும். அந்தவகையில்நாம்தாய்லாந்துடன் சுதந்திரவர்த்தகஉடன்படிக்கையை மேற்கொள்ளவுள்ளோம்.

தாய்லாந்து பிரதமர் பெப்ரவரி 3 இலங்கைக்கு வருகின்றார். அவர் முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அவர் எமது சுதந்திர தினத்தில் பங்கேற்பார் – என்றார்.

## செங்கடலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணத்தில் அன்றாடம் கடலை நம்பியிருக்கின்ற ஒரு சமூகம் கடந்த 15 வருடங்களாக வெளிநாட்டுப் படகுகளின் வருகையால் பாதிக்கப்பட்டு வருகின்றது.

தங்களுடைய வாழ்வாதாரத்தினையும்,எதிர்காலத்தினையும் அந்த சமூகம் இழந்து தவிக்கின்றது. இந்த நிலைமைகள் தொடர்பில் எத்தனையோ தடவைகள் நாம் ஜனாதிபதிக்கும் ஆளும் தரப்புகளுக்கும் எடுத்துக் கூறிவிட்டோம்.

எமது கடல்வளங்களையும், வாழ்வாதாரத்தினையும் பாதுகாப்பதற்காகநாம்இந்தியாவுக்குச் சென்று பேச்சு நடத்தவேண்டும் என்று கூறுகின்றார்கள். நாம் இந்தியாவுக்குச்சென்றுபேச்சுக்களை நடத்துவது அவசியமற்றது.

செங்கடலைப் பாதுகாப்பதற்குத் திறன்களைக் கொண்டுள்ள இலங்கை கடற்படையால் நாட்டின் வடக்கு கடலைப் பாதுகாப்பதற்கு இயவில்லையா என்ற கேள்வி எழுக்கின்றது.

அந்தக் கடற்படையால், நாட்டின் கடல்வளங்களை பறிக்கும் வெளிநாட்டுப் படகுகளின் வருகையை ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை என்ற கேள்விகள் உள்ளன என்றார்.

## தென்னிந்தியாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பை ஏற்படுத்துவது குறித்து இந்தியப்பிரதமர்நரேந்திரமோடியுடன் தான் கலந்துரையாடியதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன் அண்மையில் யாழ். ஜெட்விங் ஹோட்டலில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒரு நாடு என்ற ரீதியில் பிராந்திய ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கொழும்பு மற்றும் திருகோணமலைத் துறை முகங்களை வலுவான துறைமுகங்களாக மாற்றுவதற்கான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

2025 ஆம் ஆண்டளவில் 5 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைவதன் இலக்கையும் 2030 ஆம் ஆண்டளவில் படிப்படியாக அதனை 7.8 சதவீதமாக அதிகரிப்பதன் இலக்கு குறித்தும் விளக்கமளித்த ஜனாதிபதி, இலங்கை உயர் பொருளாதார வளர்ச்சி வீதத்தை விரைவில் அடைய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இதன்போது மாணவர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் பதிலளித்ததுடன் அவற்றில் சில கேள்விகளும் ஜனாதிபதி வழங்கிய பதில்களும் வருமாறு,

கேள்வி: ஒரு நாட்டின் வருமானத்திற்கு வரி வருமானம் முக்கிய காரணியாகும். நாங்கள் எங்கள் பல்கலைக்கழக ஆய்வுகளில் தொழில்முனைவோர் ஆலோசனைகள் மற்றும் தொழில்முனைவு பற்றி கற்கிறோம். ஆனால் ஜனாதிபதி அவர்களே, அது நடைமுறையில் செயல்படுத்தப்படுவதில்லை. எனவே, தொழில் முனைவோர் நடவடிக்கைகளுக்கான மாணவர்களின் ஆலோசனைகளை உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பதில்: அத்தகைய வட்டத்தை உங்கள் பீடத்தில் நிறுவி, எமது பொருளாதார விவகாரம் தொடர்பான குழுவுடன் நேரடியாக இணைய முடியும்.

கேள்வி: ஜனாதிபதி அவர்களே, இத்திட்டம் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஊக்கமளித்தால், அது மிகவும் பொருத்தமானது என்பதைக் கூற வேண்டும்.

பதில்: பல்கலைக்கழக மாணவர்களுக்கு குழுக்கள் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு திறைசேரிக்குச் சென்று அது எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்து கற்கலாம்.

கேள்வி: பல்கலைக்கழக மாணவர்கள் ஆங்கில மொழியில் தமது கல்வியைத் தொடர்வதில் பெரும் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர். ஒரு சந்தர்ப்பத்தில், எமது பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியில் கல்விகற்க வேண்டியதன் காரணமாக தற்கொலைச் சம்பவம் ஒன்றும் பதிவாகியுள்ளது. எனவே, அடிப்படை நிலையிலிருந்து மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்த ஏற்பாடு செய்ய முடியுமா?

பதில்: கொழும்பு பல்கலைக்கழகத்தில் அவ்வாறான பிரச்சினை இல்லை என நான் நினைக்கிறேன். மொரட்டுவ பல்கலைக்கழகத்திலும் அவ்வாறானதொரு பிரச்சினை எழவில்லை. ஆனால் நீங்கள் அனைவரும் ஆங்கிலம் கற்க வேண்டும். ஆங்கிலம் ஒரு சர்வதேசமொழி. நீங்கள் செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பத்துடன் செயற்பட வேண்டுமென்றால் ஆங்கில அறிவு அவசியம். அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா, இந்தியா உட்பட உலகின் பல நாடுகள் ஆங்கில மொழியில் பணிகளை மேற்கொள்கின்றன. எதிர்காலத்தில் சீனாவும் இந்த வழிமுறையைப் பின்பற்றும்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ள நிலையில், பல்கலைக்கழக மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்துவதுகட்டாயமாகியுள்ளது. அதன்படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலமாகவும் தேவைப்பட்டால், பிரிட்டிஜ் கவுன்சில் போன்ற நிறுவனங்கள் மூலம் அதற்கான வசதிகளை வழங்க நாம் எதிர்பார்க்கிறோம்.

கேள்வி: ஜனாதிபதி அவர்களே, ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடிப்பதற்கு செலவழித்த காலத்தை விட, ஒரு அரச பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவன் பட்டப்படிப்பை முடிப்பதற்கான கல்வித்தகுதிகளைப் பெறச் செலவழிக்கும் காலம் மிக அதிகம். எனவே நாம் தொழில் சந்தைக்குச் செல்லும்போது, அவர்களுக்கு நம்மை விட அதிக அனுபவம் கிடைக்கிறது.. இதற்கு உங்கள் பரிந்துரை என்ன?

பதில்: நான் ஒரு அரச பல்கலைக்கழகத்தில் படித்தேன். நான் 18 வயதில் பல்கலைக்கழக கல்வியைத் தொடங்கி 21 வயதில் பட்டம் பெற்றேன். 23 வயதில் வழக்கறிஞரானேன். இது பல்கலைக்கழகத்தின் உள்ளகப் பிரச்சினை. இன்று சிலர் பல்கலைக்கழக கல்வியை சீர்குலைத்துவருகின்றனர். ஆனால் நாங்கள் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது, முதல்தவணையின் கடைசி இரண்டுவாரங்கள் மட்டுமே வேலை நிறுத்தத்திற்கு ஒதுக்க உபவேந்தருடன் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வோம். அவரும் அதற்கு உடன்பட்டார். அவ்வாறே நாமும்நடந்துகொண்டோம். எனவே, நாம் ஒரு முறைமையின் கீழ் செயல்படுவது மிகவும் முக்கியம் என்று நான் நினைக்கிறேன்.

அத்துடன், மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர், மூன்று அல்லது நான்கு வருடங்களுக்குள் கல்வியை நிறைவு செய்து பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற சட்டத்தை எதிர்காலத்தில் கொண்டு வர எதிர்பார்க்கின்றோம். மருத்துவ பீடங்களுக்கு அது தேவையில்லை.

கேள்வி: ஜனாதிபதி அவர்களே, நான் ஒரு ஆலோசனை முன்வைக்கலாமா? பெரும்பாலும் அரசாங்கபாடசாலைகள்அனைத்தும் ஒரே நாளில் தொடங்கி ஒரே நாளில் தான் நிறைவடைகின்றன. ஏன் அரசாங்கப்பல்கலைக்கழகங்களால் அதைச் செய்ய முடியாது?

பதில்: பல்கலைக்கழகங்களின் கல்வியாண்டு அக்டோபரில் தொடங்குகிறது. அது அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 இல் முடிவடைகிறது. நாங்கள் பல்கலைக்கழகத்தில்இருந்தபோதும், கல்வி ஆண்டு அக்டோபரில் தொடங்கியது. பல நாடுகளில், பல்கலைக்கழக கல்வியாண்டு அக்டோபர் முதல் செப்டம்பர் வரை செயற்படுத்தப்படுகிறது என்றார்.

# தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேசத் தயார் மக்கள் சக்தியின் பொதுச்செயலர் அறிவிப்பு

அனைத்துத்தமிழ்அரசியல்கட்சிகளுடனும் பேச்சுகளை நடத்துவதற்குத் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தி, நாட்டின் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள தரப்பாகும். அதுமட்டுமன்றி, சிறுபான்மைக் கட்சிகளும் சிறிய கட்சிகளும் எம்முடன் தொடர்ச்சியாகஐக்கியகூட்டணியில்இணைந்து செயற்பட்டு வருகின்றன.

அதேநேரம், தமிழ் அரசியல் கட்சிகள் தமது சார்பில் வேட்பாளரை நிறுத்துவதற்கு முழுமையான உரித்தைக் கொண்டிருக்கின்றன. அதில் நாம் மாற்றுக்கருத்தைக் கொண்டிருக்கவில்லை.

இருப்பினும், அத்தரப்பினரையும் எம்முடன் இணைத்து எமது பரந்துபட்ட கூட்டணியில் பங்களிகளாக்குவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். இன,மொழி,மத வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தைக் கட்டியெழுப்புவதற்காக நாம் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

ஆகவே, தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எம்மிலிருந்து விலகி நிற்கும் நிலைமையைத் தவிர்ப்பதற்காக நாம் அனைத்து தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்துவதற்குத் தயாராகவே உள்ளோம்.

மேலும், நாட்டில் அனைத்து சமூகங்களுக்கும் சுபீட்சமான எதிர்காலம் ஒன்றை உருவாக்குவதாக இருந்தால் அனைவரும் ஒன்றிணைவது அவசியமாகும்.

அந்தச்செயற்பாட்டில்நாம்அனைவருடனும் கைகோர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். தெற்கில் மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அது போன்று தான் வடக்கிலும் மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள். அந்த மாற்றத்துக்கான தலைமையை ஐக்கிய மக்கள் சக்தி வழங்குவதற்குத் தயாராகிவிட்டது. அதற்காக அனைவரது ஒத்துழைப்புக்களையும் பெறவுள்ளோம். -என்றார்.

(05)

# பிக்குகள் ஆதரவைபெறும் சூழ்ச்சியில் தமிழ்ப் பிரிவினைவாதிகள் மும்முரமாம்

## கலாநிதி குணதாச அமரசேகர கூறுகிறார்



தமிழ்ப் பிரிவினைவாதிகள் தற்போது பிக்குகளின் ஆதரவை பெறும் சூழ்ச்சி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

பௌத்தபிக்குகளே இந்நாட்டில் ஒற்றையாட்சியின் காவலர்களாக இருந்துவருகின்றனர். இலங்கை சமஷ்டி நாடாவது அவர்களின் அழுத்தத்தால்தான் தடுக்கப்பட்டு வருகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடு பயங்கரமான நிலையை எதிர்கொண்டுள்ளது. இதற்கு முன்னர் இவ்வாறானதொரு நிலைமையை எதிர்கொள்ளவில்லை. ஜனாதிபதியின் படமொன்று அண்மையில் ஊடகத்தில் வெளி யானது. ஒரு புறத்தில் பிக்குகள் எனக் கூறிக்கொள்ளும் சிலர் இருந்தனர். மறுபுறத்தில் உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்கள் இருந்துள்ளனர்.

இமயமலை பிரகடனம்எனக்கூறி பிரகடனமொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஆறு யோசனைகள் உள்ளன.

இலங் கையை சமஸ்டி நாடாக்கி, அதன்மூலம்ஈழத்தை அடைவதே அதன் நோக்கமாகும்.

ஜனாதிபதியைசந்தித்தபின்னர் மகாநாயக்க தேரர்களையும் சந்தித்துள்ளனர். அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் பேச்சு நடத்தியுள்ளனர்.

அஸ்கிரிய மற் றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் இமயமலை பிரகடனத்துக்கு இணக்கம் என்ற தகவலை தற்போது அவர்கள் பரப்பி வருகின்றனர்.

தமிழ்ப்பிரிவினைவாதிகளின் தேவைக்கேற்ப இந்நாடு சமஸ்டி நாடாக மாறாமல் இருப்பதற்கு பிக்குகள் சமூகமே காரணம். எனவே இந்த இமயமலை பிரகடனத்துக்கு இணாங்கக்கூடாது என கலாநிதி குணதாச அமரசேகர வலியுறுத்தி உள்ளார். (05)

# யாழ்.சித்த மருத்துவ துறையை பீடமாக தரமுயர்த்த வேண்டும்

## பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவதுறையைபீடமாகதரமுயர்த்த வேண்டும் என பல்கலைக்கழக மாணவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையேயான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஸ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஸ்ட பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா ஆகியோரும் அக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில், மாணவர்களால், மாணவ விடுதிகளில் உள்ள குறைபாடு, முகாமைத்துவ பீடத்திற்கான பஸ் வசதிகளை ஏற்படுத்தல், சித்த மருத்துவ துறையை பீடமாக தரமுயர்த்தல், இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களுக்கான உள்ளக பயிற்சி வழங்குதல் போன்ற விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

இக் கலந்துரையாடலில் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 37 மாணவர்கள் இந்தக் கலந் துரையாடலில் பங்கேற்றனர்.

(05)

# அம்பலாங்கொடை கடற்பரப்பில் மிதந்துவந்த பீடி இலைகள் மீட்பு



அம்பலாங்கொடை கடற்பரப்பில்மிதந்துகொண்டிருந்த நிலையில், பீடி இலைகளை கடற்படையினர் வெள் ளிக் கிழமை மீட்டுள்ளனர்.

கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையின் போதே மூன்று பொதிகளில் சுமார் 118 கிலோகிராம் மற்றும் 120 கிலோ கிராம் எடையுள்ள பீடி இலைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

கடற்படை நடவடிக்கைகள் காரணமாக வர்த்தகர்கள் அதனை கடலில்கைவிட்டுசென்றிருக்கலாமென கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (05)

# மொழியறிவு, சட்டப்புலமை மாத்திரம் தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தராது

## சிறிதரன் எம்.பி. இப்படிக் கூறுகிறார்



மொழி அறிவு, சட்டப்புலமை மாத்திரம் தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தராது. மன ஒற்றுமையும் ஆற்றலும் தமிழ் மக்கள் மீதான தேசிய உணர்வும் தேசிய விடுதலைக்கான வளி வரைபடத்தையும் சரியாக எவர் கொண்டு செல்கின்றாரோ, அவரே இந்த பாதையை கொண்டு செல்வார் என இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தல் இம்மாதம் நடைபெறவுள்ளது. அப்பதவிக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகிய மூவரும் போட்டியிடுகின்றனர்.



இந்நிலையில் சனிக்கிழமை மட்டக்களப்புக்குவிஜயம் செய்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், அக்கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் மட்டக்களப்பு செட்டிபாளையத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆங்கிலம், மொழி, சட்டம் என்பன ஒருவருடைய ஆற்றலும் திறமையுமாகும். இதனை யாரும் இகழ்ந்து பார்க்கத் தேவையில்லை. ஆனால் ஆங்கிலம், மொழி, சட்டம் போன்றவை என்றால் எமக்கு சேர் பொன்.இராமநாதன், தந்தை செல்வா, ஜி.ஜி.பொன்னம்பலம், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், போன்றோரின் காலத்தில் நாங்கள் விடுதலை பெற்றிருக்க வேண்டும். மொழி அறிவு, சட்டப்புலமை மாத்திரம் தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தரா. மன ஒற்றுமையும், ஆற் றலும், தமிழ் மக்கள் மீதான தேசிய உணர்வும், தேசிய விடுதலைக்கான வளி வரைபடத்தையும் சரியாக எவர் கொண்டுசெல்கின்றாரோ, அவரை இந்தப் பாதையை கொண்டு செல்வார்.

மொழியியல் ஒருவருக்கான கொடை, சட்டம் என்பது கல்வி ரீதியாக கிடைக்கின்ற ஆற்றல். ஆனால் மக்களை வழிநடத்து-வதற்கு தைரியமும், இனம் ரீதியான சிந்தனையும் இருந்தால் அது ஒரு தலைமைத்துவமாக அமையும்.

எனவே தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் சந்தித்தஎமதுகட்சியின்பொதுசபைஉறுப்பினர்களிடையே நான் இக்கட்சியின் தலைவராக வரவேண்டும் என்ற என்ணத்தைக் கொண்டிருக்கின்றார்கள். அதற்குரிய பெரும்பாலான ஆதரவையும், சம்மதத்தையும் எனக்குத் தெரிவித்திருக்கின்றார்கள். அவர்களின் பலத்தோடும், ஒற்றுமையோடும், நடைபெற இருக்கின்ற எமது உட்கட்சித் தேர்தலிலே நான் வெற்றிபெற்று கட்சியின் பொறுப்பை ஏற்று வழிநடத்திச் செல்வதற்கு நான் தாயாராக இருக்கின்றேன் என அவர் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (05)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

இந்த வருடத்தின் முதல் 04 நாள்களில் மாத்திரம் 25,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை அதிகளவான சுற்றுலான பயணிகளான 5,060 பேர், ரஷ்யாவிலிருந்து வந்துள்ளதுடன் 3,333 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர்.

மேலும் கடந்த ஆண்டில் மட்டும் 14 லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து முன்னூற்று மூன்று சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதுடன், இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை 23 லட்சமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(05)

# வவுனியா புதிய பஸ் நிலையம் முன்பு நிரந்தர இராணுவ முகாம் முளைத்தது

*வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக நிரந்தரமாக இராணுவ முகாம் ஒன்று இரவு வேளையில் அமைக்கப்பட்டுள்ளது.*

*ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் நடைபெற்றபோது புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக இராணுவக் காவலரணொன்று அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தது.*

*அதன் பின்னரும் குறித்த காவலரண் அகற்றப்படாத நிலையில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.*

*இந் நிலையில் வெள்ளிக்கிழமை கனரக வாகனங்கள் சகிதம் சென்ற இராணுவத்தினர் குறித்த பகுதியால் நிரந்தரமாக பாரியளவிலான இராணுவ முகாம்ஒன்றைஅமைத்துள்ளனர்.*

*இதன் காரணமாக பயணிகளும் குறித்த பகுதியில் உள்ள பொதுமக்களும் அச்சத்துக்குள்ளாகியுள்ள நிலையில், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரியுள்ளனர். (05)*


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போது Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# அரசை வீழ்த்துவதற்கான மக்களின் ஒரேதெரிவு ஐக்கிய மக்கள் சக்தியே

## நாலக கொடஹேவா கூறுகிறார்



தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்து-வதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொள்வதே எமக்குள்ளஒரேதெரிவாகும்என்றுதெரிவித்துள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினரான கலாநிதி நாலக கொடஹேவா, சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்கள் தனித்தனியாக சுயாதீனமாகவேதீர்மானத்தைஎடுத்துள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டிணையும் தீர்மானத்தை எடுக்கவில்லை என்று அதன் தலைவரான டலஸ்அழகப்பெருமஅறிவித்துள்ளநிலையில், கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி ஜனநாயகப் பண்புகளுடனான நல்லாட்சியை உருவாக்குவதே எமது இலக்காக உள்ளது. அந்தவகையில்தேசியபரப்பில்உள்ளஅரசியல் அணிகளில் சிறந்த தரப்புடன் கைகோர்க்க வேண்டியது அவசியமாகின்றது.

அவ்வாறு கைகோர்க்காது விட்டால் எம்மால் தற்போதைய ஆட்சியை வீழ்த்த முடியாது. அந்தவகையில், தற்போதைய ஆட்சியை வீழ்த்துவதற்குள்ள ஒரே தெரிவு பிரதான எதிர்க்கட்சியாகும்.

அந்தக்கட்சிதலைமையிலானபரந்துபட்ட கூட்டணியிலேயேநாம்இணைந்துள்ளோம். அவர்களுடன் இணைந்து மக்கள் எதிர்பார்க்கின்ற நல்லாட்சியை உருவாக்குவதே எமது இலக்காக உள்ளது.

அதுமட்டுமன்றி, நாட்டின் பொருளாதாரத்தைக்கட்டியெழுப்புவதாக இருந்தால் அதுநிச்சயமாக அனைத்துசமூகங்களினதும் பங்களிப்புடன் தான் நடைபெறுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன. அந்த வகையில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான பரந்துபட்ட அணியில் அனைத்து சமூகங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர். அதனடிப்படையில் தான் நாம் அக்கட்சியுடனான கூட்டில் இணைந்து கொண்டோம்.

சுதந்திரமக்கள்காங்கிரஸில்மொத்தமாக13உறுப்பினர்கள்உள்ளனர். அவர்களில் அறுவர் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் இணைந்துள்ளனர். இன்னும் இருவர் சொற்ப காலத்தில் இணைந்துகொள்ளவுள்ளனர்.

அதேநேரம், எமது தரப்பிற்கு தலைமை வகித்துவரும்டலஸ்அழகப்பெருமஇன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. எமது தரப்பில் யாருடன் இணைந்து அடுத்தகட்ட அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பது என்று கூட்டாக தீர்மானம் எடுக்கப்படவில்லை.

மாறாக, தனித்தனியாக உறுப்பினர்கள் சுதந்திரமாகவே தீர்மானித்தனர். ஆகவே, ஜனநாயக இலட்சணங்கள் கொண்டதாகவே நாம் செயற்படுகின்றோம். தீர்மானங்களில் எந்தவிதமான ஆதிக்கங்களையும் யாரும் செலுத்தவில்லை. - என்றார். (05)

# ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள்!......................

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆதரவுபெற்ற தீவிரவாத இஸ்லாமிய குழுக்கள் மற்றும் பிரிவினைவாதிகள் உள்ளிட்ட பிற போராளிகளின் தலையீடு, முழு நாட்டையும் சிக்கலாக்கியுள்ளது.




**2018 ஸ்டாக்ஹோம் ஒப்பந்தம்**

இந்த நெருக்கடிக்கு தீர்வாக, ஐ.நா. ஆதரவுடன் நடைபெற்றஅமைதிப்பேச்சுக்களில்மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. 2018 ஸ்டாக்ஹோம் ஒப்பந்தம் உதவிக்கான முக்கிய மையமான துறைமுக நகரமான ஹொடெய்டாவில் ஒரு போர் நிறுத்தத்தை உருவாக்கியது.

ஈரான், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட பிராந்திய நாடுகளுக்கு இடையிலான உரசல் போரை நீட்டிப்பதாக அவதானிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சவூதி எண்ணெய் நிலையங்கள் மீதான ஏவுகணை தாக்குதலுக்கு ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் பொறுப்பேற்றபோது நிலைமைகள் மேலும் மோசமடைந்தன. ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் இந்த தாக்குதலை நடத்தவில்லை என்று ஐ.நா கண்காணிப்பாளர்கள் முடிவு செய்தனர், அதே நேரத்தில் சவூதி தலைமையிலான கூட்டணி ஈரான் மீது குற்றம் சாட்டியது.

**யார் இந்த ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள்?**

ஏப்ரல் 2022 இல் யேமனின் புதிய நிர்வாகக் குழு ஹவுதி எதிர்ப்பு படைகளை ஒருங்கிணைக்க உதவியபோது அமைதி முயற்சிகள் வேகமடைந்தன. இது அனைவரையும் உள்ளடக்கிய பேச்சுக்களுக்கு களம் அமைத்தது. பிற்பகுதியில், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் கூட்டணிப் படைகளும் பல ஆண்டுகளில் தங்கள் முதல் நாடு தழுவிய போர்நிறுத்தத்தை ஒருங்கிணைத்தனர்.

இதன் பின் தலைநகர் சனாவில் இருந்து வணிக விமானங்களை மீண்டும் தொடங்க அனுமதித்தது மற்றும் சில எரிபொருள் கப்பல்கள் ஹொடெய்டாவில் நிறுத்த அனுமதிக்கப்பட்டன.

போரிடும் கட்சிகள் பல முறை போர்நிறுத்தத்தை நீட்டித்தன, ஆனால் ஆறு மாத ஒப்பீட்டு அமைதிக்குப் பிறகு, அதை மீண்டும் புதுப்பிக்கத் தவறிவிட்டன. இந்த ஒப்பந்தம் முறிந்ததற்கு யேமன் அரசும், ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும் ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிவருகின்றனர். இது மீண்டும் கடுமையான சண்டைக்கு வழிவகுத்து, யேமனை ஒரு முழு அளவிலான நெருக்கடிக்குள் தள்ளியது.




**அமெரிக்க ஆயுதங்கள்**

அமெரிக்க அரசு சவுதி அரேபியாவிற்கு ஆயுதங்களை கொடுத்தது மட்டுமல்லாமல் அதற்கு அரசியல் ரீதியிலான பாதுகாப்பையும் வழங்கியது. யேமனில் குழந்தைகள் மீதான சவுதியின் தாக்குதலை உலகின் வெட்கங்கெட்ட செயலில் ஒன்றாக அன்று ஐ.நா பட்டியலிட்டது.

சவுதிக்கு எதிராக விசாரணை மேற்கொள்ள வாய்ப்புகள் வந்தபோது, அமெரிக்க அரசு பேசாமல் வாய்மூடி இருந்தது. அதேவேளை ஐநாவின் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கி வரும் நிதியாதாரத்தை நிறுத்துவதாக ரியாத் தலைமை மிரட்டியதாக கூறி சவுதியின் பெயரை அந்த பட்டியலிலிருந்து நீக்கினார் அன்றைய ஐ.நா தலைவர் பன்-கி-மூன்.

அமெரிக்க அரசின் தலையீடோ ஒப்புதலோ இல்லாமல் இது நடந்திருக்க சாத்தியமே இல்லை. ஆகவே பைடனின் இந்த அறிவிப்பும்கூட முதலைக் கண்ணீர் வடித்த கதைதான்.

சவுதி தலைமையிலான எட்டு நாடுகள் யேமன் அரசுக்கு ஆதரவாக உள்நாட்டு மோதலில் தலையிடத் தொடங்கின. பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியது. அனைத்து வான் வழித் தாக்குதல்களுக்கும் இந்த நாடுகளே பொறுப்பானவையாகும்.

அதற்குத் தேவையான உத்திகள், தொழில்நுட்ப வசதிகளை அமெரிக்கா செய்து கொடுத்தது. சவுதி மற்றும் அதன் கூட்டணி நாடுகளுக்கு 2015-2019 காலப் பகுதியில் சுமார் 31.4 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுத ஏற்றுமதி நடந்துள்ளது.

இக்காலகட்டத்தில் ஜி-20 நாடுகள் யேமனுக்கு அளித்த மனிதாபிமான உதவிகளை ஒப்பிடும்போது ஆயுத ஏற்றுமதி ஐந்து மடங்கு அதிகமானதாகும். கூடுதலாக சவுதியும் தன் பங்கிற்கு 3.8 பில்லியன் டொலர் நிதியை நிவாரணமாக வழங்கியது.

அமெரிக்க மற்றும் இங்கிலாந்து நாடுகள் யேமனுக்கு தாங்கள் வழங்கும் உதவித்தொகையைவிட பன்மடங்கு ஆயுத விற்பனையைச் செய்கின்றன. இதேவேளை ஜப்பான் யேமனுக்கு உதவித்தொகையை வழங்குகிறது ஆனால் சவுதிக்கு ஆயுதங்கள் எதுவும் ஏற்றுமதி செய்யவில்லை.

ஒவ்வொரு நாடுகளிலும் உள்நாட்டுப் போர்களை ஊக்கப்படுத்தி வளர்த்துவிட்டு, பில்லியன்கணக்கான டொலர்களை ஆயுத ஏற்றுமதி மூலம் சம்பாதித்துக் கொண்டே, மற்றொரு புறத்தில் தாம் உருவாக்கி வளர்த்த போரால் பாதிக்கப்படும் அப்பாவி மக்களுக்கு உதவி அளிப்பதாக வள்ளல் வேடம் போடுகின்றன மேற்குலக நாடுகள்.

பெரும் பணக்கார ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதார அடித்தளம், பல நாட்டு மக்களின் சாவு ஓலங்களின் மீதும் பிணங்களின் மீதும்தான் கட்டமைக்கப் பட்டிருக்கின்றன

**யேமன் சிறார்கள் வாழ்க்கை**

யேமனில் மோதலில் வளரும் குழந்தைகளின் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. குழந்தைகள் நன்றாக இருக்க, அவர்கள் பாதுகாப்பாகவும், நேசிக்கப்படவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவும் வேண்டும். அவர்கள் குடும்பத்தினரால் கவனிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களின் சமூகத்தால் ஆதரிக்கப்பட வேண்டும் - எடுத்துக்காட்டாக, பள்ளி மூலம். ஆனால் மோதல் வலயங்களில் வாழும் மில்லியன் கணக்கான குழந்தைகளுக்கு, இந்த முக்கியமான தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மோதலின் தாக்கம் - உடல் மற்றும் மனரீதியாக - பேரழிவை ஏற்படுத்துகிறது.




ஒவ்வொரு வான்வழித் தாக்குதல், முற்றுகை மற்றும் கடுமையான மீறல் ஆகியவை இப்போது மற்றும் வரவிருக்கும் ஆண்டுகளில் குழந்தைகளின் மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் கடுமையான எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்.

அங்கே பெரும்பாலான குழந்தைகள் சிறு வயதிலிருந்தே தங்கள் குடும்பங்களையும் தங்களையும் கவனித்துக் கொள்ளவும் பராமரிக்கவும் வேலை செய்கிறார்கள். மிகக் கடுமையான உண்மையும், இதற்குக் காரணமும் போர்களில் அவர்கள் பெற்றோரை இழந்ததே ஆகும்.


யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
NCI
CCIY
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILE zone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்